# Salve Regina


**Society of St. Pius X**, Palayamkottai.
Tel:0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com

**செப்டம்பர் 2007 மலர்: 2 இதழ்: 9**
**(தனிச்சுற்றுக்கு மட்டும்)**


# சிலுவைப்பலியும் பூசைப்பலியும் ஒன்றே!

சேசு கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

பாரம்பரிய திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை விடுவித்து, பாப்பரசர் வெளியிட்ட Motu Proprio 'Summorum Pontificum' - ஆணைமடலின் அமலாக்கம் இம்மாதம் 14-ம் நாள் - திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாளிலிருந்து தொடங்குகிறது. ஏற்கனவே பாரம்பரிய பூசையைப் பற்றிய விழிப்புணர்வும், ஆர்வமும் உலகமெங்குமுள்ள விசுவாசிகளிடம் குறிப்பாக, இளைஞர்களிடம் ஏற்பட்டு வருகிறது! மேலை நாடுகளில் சில மேற்றிராணிமார்களும், குருக்களும் திரிதெந்தீன் திவ்விய பலிபூசையைச் செய்யத் தொடங்கிவிட்டார்கள். நிச்சயமாக, இது கிறீஸ்துவர்களுக்கு - திருச்சபைக்கு பெரிய வரப்பிரசாதத்தின் ஊற்றாக அமையும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.




இப்பாரம்பரியப் பூசைதான் உண்மையான கத்தோலிக்க விசுவாசத்தை நமக்குக் கற்பிக்கிறது. 2000 ஆண்டுகளாக திருச்சபை வளப்படுத்தி ஆன்மாக்களை அர்ச்சித்து வந்தது. ஆனால் புதுப்பூசை அப்படியல்ல என்பதை கடந்த 40 ஆண்டுகளாக திருச்சபையில் நிலவி வரும் விசுவாச இழப்புகளும், மறுதலிப்புகளும் நமக்கு உணர்த்துகின்றன. அதற்கு காரணம், சென்ற இதழில் நாம் குறிப்பிட்டபடி கர்தினால் ஒட்டவியானி ஆண்டகை கூறுவது போல, "...புதுப்பூசை ...திருச்சபையின் பாரம்பரியப்போதனையிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் விலகிச் செல்கிறது" என்பதேயாகும்.

மேலும் பாரம்பரிய திரிதெந்தீன் திவ்விய பலிபூசையானது, அன்று கல்வாரியிலே நமதாண்டவர் இரத்தம் சிந்தி நிறைவேற்றிய அதேப் பலியை இரத்தம் சிந்தாத வகையில் நிறைவேற்றப்படுகிறது. இவ்வாறு பாரம்பரியப் பூசை சிலுவையோடு பிரிக்கமுடியாதபடி பிணைந்துள்ளது. ஆனால் புதுப்பூசையோ சிலுவைப்பலி கருத்து ஏதுமில்லாமல் பரிகாரமில்லாத வெறும் காணிக்கைச் சடங்காகவும் - சிலுவைப்பலியில்லாத பாஸ்கா மறைபொருள் கொண்டாட்டமாகவே தான் உள்ளது. இது நடைமுறையில் பாடுபட்ட சிலுவைகளை ஆலயப்பீடங்களிலிருந்து அகற்றப்படுவதில் வெளிப்படுகிறது. மேலும் இது நற்கருணைக் கொண்டாட்டமாகவும் அனுசரிக்கப்படுகிறது. அதோடு சிலுவைப்பலி என்ற கருத்தே புதுப்பூசையில் அகற்றப்பட்டுவிட்டது.

செப்டம்பர் 15-ம் நாளன்று சிலுவையடியில் தமது திருக்குமாரனின் கொடியப் பாடுகளில் பங்கேற்ற வியாகுலமாதாவின் திருநாள் அனுசரிக்கப்படுகிறது. அவர்களே தமது திருக்குமாரனின் சிலுவைப்பலிபூசையை திரும்பவும் பெற்றுக்கொள்ள உதவும படி மன்றாடுவோம்.

இம்மாதத்தின் 3-ம் நாளில் அர்ச். 10-ம் பத்திநாதரின் திருநாளைக் கொண்டாடுகிறோம். அர்ச். 5-ம் பத்திநாதருக்குப் பிறகு புனிதப்பட்டம் பெற்ற இந்த அர்ச்சிஷ்டவரைத் தான் மிக.வந்.மார்செல் லெ.ஃபவர் ஆண்டகையவர்கள் தான் தொடங்கிய குருக்கள் சபைக்கு பாதுகாவலராக தெரிந்துகொண்டார். ஏனென்றால்

இந்த அர்ச்சிஷ்டவர் வாழ்ந்த காலத்தில் திருச்சபையைத் தாக்கி வந்த **"நவீனத்தை"** (Modernism) முழு வல்லமையோடு எதிர்த்துப் போராடி ஒடுக்கினார். அதற்காக 1907-ம் ஆண்டு ஜூலை 3-ம் நாள் "Lamentabili ", அதே ஆண்டு செப்டம்பர் 8-ம் தேதி "Pascendi Dominici Gregis" என்ற நிருபங்களையும் எழுதி நவீனத்தை கண்டனம் செய்தார். இந்த வருடத்தோடு மேற்கண்ட நிருபங்கள் எழுதப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந் துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது! இவரது காலத்தில் நவீனம் ஒடுக்கப்பட்டாலும், அது தலைமறைவாகி பின்பு மீண்டும் சிறிது, சிறிதாகத் தலைதூக்கி இன்று - நமது காலத்தில் பகிரங்கமாகத் தோன்றி திருச்சபையை முழுவதுமாகப் பீடித்துள்ளது. அதனை இந்த அர்ச்சிஷ்டவருக்கு இருந்த அதே உறுதியுடன் எதிர்த்துப் போராட தமது சபைக்கு அவரது பெயரையே சூட்டி நவீனத்திற்கு எதிரான தமது அனைத்து முயற்சிகளுக்கும் அவரையே பாது காவலராகத் தேர்ந்தெடுத்தார் மிக.வந். லெ.ஃபவர் ஆண்டகை யவர்கள். அர்ச். பத்தாம் பத்திநாதர் பாப்பரசரின் விருதுவாக்கான "Instaurare omnia in Christo" - ''சகலத்தையும் கிறீஸ்து வுக்குள் புதுப்பிக்க வேண்டும்'' (எபேசி.1 : 1 0 ) என்பதையே நமது "Salve Regina'' பத்திரிக்கையையும் தனதாக்கிக் கொண்டு, அவருடைய பாதுகாவலிலேயே வைத்து இயங்கி வருகிறது.

இவ்விதமுடன் இப்பத்திரிக்கை தமது முதலாமாண்டு நிறைவை கொண்டாடுகிறது. "Salve Regina" தமது முதல் இதழில் உறுதியளித்தது போல " ...நமதாண்டவர் சேசுகிறீஸ்துவின் பத்தினியாகிய ஏக பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளை அதன் தூய்மையுடனும் முழுமையுடனும் தருவதில்...'' என்றும் பிரமாணிக்கமாக இருக்கும். இந்த ஓர் ஆண்டளவாக இதை ஆசீர்வதித்து வழிநடத்திய சர்வேசுரனுக்கும், அதற்கு தங்களது நேரத்தையும், நிதியுதவியையும் தந்து ஆதரவளித்த சகல உபகாரிகளுக்கும் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் சார்பில் மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

சங். பேட்ரிக் சம்மர்ஸ் சுவாமிகளின் இடத்தில் சங். ராபர்ட் புருச்சியானி சுவாமிகள் இந்தியாவின் புதிய சிரேஷ்டராக பொறுப்பேற்றுள்ளார்கள். இவரது ஆளுகையின் கீழ் இந்தியாவில் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் அப்போஸ்தலத்துவம் செழித்து வளர நமது ஜெபதப உதவிகளைப் புரிவோமாக.

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**

**பாளையங்கோட்டை**

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

**விசுவாசிகள் பயனடையும்படியாக இங்கே பிரதான மந்திரங்களுடைய விளக்கங்கள் தரப்படுகின்றன –** (ஆசிரியர்)

## பரலோக மந்திரத்தின் வியாக்கியானம் (தொடர்ச்சி)

இதுமட்டுமல்லாமல் விரோதிகளைச் சிநேகிக்காமல், சர்வேசுரனுக்கு உகந்த பிள்ளைகளாகவும், மோட்ச இராச்சியத்திற்கு பங்காளிகளாகவும் இருக்கமுடியாதென்றும் சொல்லுகிறார்.

**(1) அவர் கட்டளைக் கொடுத்ததுமல்லாமல், நமக்கு உன்னத மாதிரிகைக் காண்பித்து, தமது சத்துருக்களுக்குப் பொறுத்தல் கொடுத்து,** அவர்களுக்காக தமது இரத்தத்தைச் சிந்தி மரித்தார். பகைவர்களை நாம் சிநேகிக்க வேண்டுமென்பது கண்டிப்பானக் கட்டளை. இந்த சிநேகம் சேசுநாதரின் சீஷர்களுக்குரிய விசேஷ அடையாளம். தன் விரோதியைச் சிநேகிக்காதவன் மெய்யானக் கிறீஸ்தவன் அல்ல.

**(2) மீளவும் விரோதிகளின் பேரில் நமக்கு இருக்க வேண்டிய சிநேகத்தைப் பற்றி சேசுநாதர் சொன்ன புத்திமதிகளைப் பார்த்தால்,** கட்டளையாகக் கொடுக்கப்பட்ட இந்த சிநேகத்தோடு கூட உத்தமமான மற்றொரு வகை சிநேகமும் உண்டென்பதை அறிய வேண்டும். அதாவது, தேவசிநேகத்திற்காக கிறீஸ்தவன் தனக்கு விரோதியானவனை மிகவும் அன்போடு நேசித்து, கடமையில்லாவிட்டாலும் கூட அவனுக்கு உதவி செய்வது கட்டளையல்ல. ஆனால் இது சேசுநாதர்சுவாமி கொடுத்திருக்கும் புத்திமதிகளைச் சேர்ந்தது. ஆனதால் இப்படி செய்ய மனதில்லாதவன் பாவம் கட்டிக்கொள்வதில்லையென்றாலும், இதை அனுசரிக்கிறவன் சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமான புண்ணியம் செய்கிறான் என்பதற்கு சந்தேகமில்லை.

**(3) நமது விரோதிகளுக்கு அன்பு செலுத்துவது எப்படி? –** நமது பகைவர்களைப் போல இருக்கிறவர்களுக்கு நாம் சாதாரணமாக செய்கிற சங்கை, வந்தனம், ஆசார உபசாரங்கள், ஒத்தாசை, சகாயங்கள் முதலியவைகளை அவனுக்கும் செய்வது கடமையாகும். தக்க நியாயமின்றி, அவனோடு புழங்காமலும், பேசாமலும், அவன் வந்தனம் பண்ணுகையில் கவனிக்காமலும், நம்மோடு பேசும்போது பதில் சொல்லாமலும், இவை போன்று பகைக்குரிய அடையாளங்களைக் காட்டுகிறவன் குற்றம் கட்டிக் கொள்கிறான்.

**(4)** நல்லக் கிறீஸ்தவன் இந்தக் குறைகளை விலக்குவதுமட்டுமல்லாமல், **பகைவனோடு சமாதானமாயிருக்கத் தக்கதாக தானே முதலாவது முயற்சி செய்து,** அவனுக்கு விசேஷ மரியாதை செய்து, வியாதியிலே சந்தித்து, கஷ்ட துன்பங்களில் ஆறுதலாகப் பேசி, தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய், இவ்விதம் சேசுநாதருடைய திருஇருதயத்திற்காக தன்னால் கூடிய முயற்சியெல்லாம் செய்யத் தயாராயிருப்பான்.

(ஆசிரியர்கள் இப்புத்திமதிகளைக் கிறீஸ்தவர்களுக்கு அடிக்கடி சொல்லுவதுமல்லாமல் தாங்கள் தானே இவைகளை பிரமாணிக்கமாய் அனுசரித்து, எப்போதும் மற்றவர்களுக்கு நன்மாதிரிகைக் காண்பிக்கக் கடவார்கள்.)

**(5) தனக்குச் சொந்தமானவைகளை கண்டிப்பாய்க் கேட்கலாமா? –** எதிராளியானவன் நமக்கு நஷ்டம் வருவித்ததின் காரணமாக அவன் ஏதேனும் உத்தரிக்கக் கடமைப்பட்டிருந்தால், நியாயம் கிடைக்கும்படி வழக்கு தொர்வது பிறர்சிநேகத்திற்கு விரோதமானதல்ல. ஆயினும் அவனுக்கு நஷ்டம் வருவிக்க வேண்டுமென்ற கருத்தோடு இப்படிச் செய்கிறதும், கெடுதி, தீமை, சாவு முதலியவை அவனுக்கு வரவேண்டுமென்று விரும்புகிறதும், பகை, பழிவாங்குதலைச் சார்ந்த பாவங்களாகும்.

(தொடரும்)

# அர்ச். தேவமாதாவின் பிறப்பு!

**"...கன்னிமரியாயே, சகல படைப்பினுடையவும் சிருஷ்டிகரைச் சுமந்து உம்மை உண்டாக்கியவரைப் பிள்ளையாகப் பெற்றெடுத்து என்றும் கன்னிகையாக நிலைத்திருப்பவளே, நீரே... பாக்கியவதி..."** - தேவமாதா பிறந்தநாள் பூசை – காணிக்கைக் கீதம்

செப்டம்பர் மாதம் என்றாலே மாதாவின் பிறந்தநாள் தான் நமது நினைவுக்கு வரும். ஏனெனில் தாயாகியத் திருச்சபை தேவமாதாவின் பிறந்தநாளான செப்டம்பர் 8-ம் நாளை வெகு சிறப்பாகக் கொண்டாடி மகிழ்கின்றது. பொதுவாக திருச்சபையில், அர்ச்சிஷ்டவர்கள் மோட்சத்திற்குப் பிறந்தநாளாகிய - அவர்கள் இவ்வுலகில் மரித்து பரகதி சேர்ந்த நாட்களையே திருநாட்களாகக் கொண்டாடி மகிமைப் பாராட்டி வருகிறது. எதற்கெனில் ஆன்மாக்களை மோட்சத்திற்கு வழிநடத்தி அழைத்துச் செல்லும் அதனுடைய அலுவல், ஆன்மாக்கள் மோட்சப்பாக்கியத்தை அடையும் போது முற்றுப் பெறுகிறது! தமது மக்கள் இவ்வுலகமாகிய யுத்தக்களத்தில் வெற்றி பெற்று, மகிமையில் பிரவேசிப்பதைக் கண்டு திருச்சபை அக்களிக்கிறது. அதோடு மோட்சக்கதி சேர்ந்த ஆன்மாக்கள் கடைபிடித்த புண்ணியங்களையும், அவர்களது பரிசுத்த ஜீவியங்களையும் அறிந்து கண்டுபாவித்து மற்றவர்களும் நித்திய வாழ்வடைய வேண்டும் என்ற கருத்துக்காகவும் தான் அவர்களது மரித்த நாட்களை திருநாட்களாக அனுசரிக்கிறது.



குழந்தையான தேவமாதா

ஆனால் மூன்று பேருடைய பிறந்தநாட்கள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு! நமதாண்டவர் பிறந்தநாள், பரி. தேவமாதாவின் பிறந்தநாள் மற்றும் அர்ச். ஸ்நாபக அருளப்பரின் பிறந்த நாட்களே அவை. ஏனெனில் பரிசுத்தரான சர்வேசுரனுடைய ஏக குமாரன் மனிதாவதாரமெடுத்துப் பிறந்ததால், உலகில் ஞானப் பாக்கியங்கள் (மீட்பு வந்தது) பெருகின; சாத்தானின் தலையை நசுக்கி வெற்றிவாகை சூடுவதற்காக முன்குறிக்கப்பட்ட அவருடைய தாயாரின் பிறந்தநாளோ நமது ஞானசந்தோஷத்தின் காரணமாயிற்று! அர்ச். ஸ்நாபக அருளப்பர் தமது தாயின் உதரத்தில் ஜென்மப்பாவ தோஷத்திலிருந்து சுத்தப்படுத்தப்பட்டு உலகில் பிறந்து வரவிருக்கும் மீட்பருக்கான வழிகளை ஆயத்தம் செய்ததால் அவரது பிறப்பும் நமது ஞானத் தயாரிப்புக்குக் காரணமாகத் திகழ்ந்தது.

### மீட்பைக் கொண்டு வந்த மாதாவின் பிறந்தநாள்!

இவற்றில் தேவதாயின் பிறந்தநாளே நமக்கு - மனுக்குலத்திற்கு வரவிருக்கும் மீட்பரை - மீட்பை கட்டியங்கூறும் பேரிகையாக (முரசு) - மகோன்னதமான திருநிகழ்ச்சியாகத் திகழ்கின்றது. எப்படியெனில், ஆதிப்பெற்றோரின் பாவத்தால் மறுக்கப்பட்ட - அடைபட்ட மோட்சத்தை அடைந்து - திறந்து கொடுக்க வரும் மீட்பரின வருகையை 4000 வருஷமளவாக மனுக்குலம் எதிர் பார்த்துக் காத்திருந்தது. பாவ இருளிலிருந்து தங்களை விடுவிக்க வாக்களிக்கப்பட்ட இரட்சகராகிய ஞான சூரியனான **சேசுகிறிஸ்து** எப்போது வருவார் என்று பரிதவிப்போடு காத்துக்கொண்டு இருந்த மனுமக்களுக்கு நம்பிக்கையின் ஒளிக்கீற்றாக சூரியன் உதிக்கும் முன் தோன்றும் உதயக் காலையைப் போல - விடியற்காலத்தின் நட்சத்திரமாக அவரை ஈன்றெடுக்கவிருக்கும் கன்னித் தாயின் பிறப்பு அமைகிறது. மாதாவின் பிறந்தநாள், 'மீட்பர் இதோ அடுத்து வருகிறார் - எனவே அஞ்சாதீர்"என்று திடமளிக்கும் நம்பிக்கை நாளாக அர்ச். தேவமாதாவின் பிறந்தநாள் திகழ்கிறது. சர்வேசுரனால் ஆதியிலே வாக்களிக்கப்பட்ட "ஸ்திரீயான"வளின் பிறப்பு, அவளது "வித்தாகிய" மீட்பரின் வருகையைக் கொண்டுவரும் அல்லவா? தாயின்றி சேயில்லை! மாதாவின் பிறப்பின்றி மகனின் வருகையில்லை. மகா பரிசுத்த "கன்னிபூமியாகிய" மாமரியின்றி, அதில் தோன்றி வளரும் "ஞான ஜீவியத் தருவாகிய" சேசுகிறீஸ்து இல்லை! ஆக, மகா பரிசுத்த கன்னிமரியாயின் பிறப்பு மனுக்குலத்திற்கு அது அடையவிருக்கும் ஞானப்பிறப்பிற்கான அத்தாட்சியாகத் திகழ்கிறது! இதனாலேயே தான் தேவதாயின் பிறப்பு நமது சந்தோஷத்திற்கான காரணமாயிற்று!

இதனைத்தான் அர்ச்சிஷ்டவர்களும் "ஓ சர்வேசுரனுடைய கன்னிமாதாவே, உமது பிறப்பு உலகம் முழுவதற்கும் சந்தோஷத் தைக் கொண்டு வந்தது; ஏனெனில் நீதியின் சூரியனாகிய நமது சர்வேசுரன் கிறீஸ்துநாதர் உம்மில் உதித்தார்; அவர் மனுக் குலத்தின் சாபத்தை நீக்கி, ஆசீர்வாதத்தை அருளினார்; சாவை வென்று எங்களுக்கு நித்திய ஜீவியத்தை அடைந்து கொடுத்தார்" என்று ஒருவாய்ப்பட புகழ்கின்றார்கள். திருச்சபையும் மாதாவின் பிறந்தநாளில் **"வாழ்க பரிசுத்த தாயே! பரலோகத்தையும் பூலோகத்தையும் என்றென்றைக்கும் அரசாள்கின்ற அரசனை ஈன்ற அம்மையே... வாழ்க"** (செப்டம்பர் 8-ம் நாள் பூசை - பிரவேச கீதம்) என்ற தேவதாயை வாழ்த்திப் போற்றி புகழ்ந்து தமது மக்களாகிய நம்மையும் அத்தாயிடம் மன்றாடச் செய்கிறது. அவர்களது பிறந்தநாளை வெகு ஆடம்பரமாகக் கொண்டாடி மகிழும்படி பணிக்கிறது. எனவே தேவதாயின் மக்களாகிய நாமும் நமது மோட்ச அன்னையின் பிறந்தநாளை மிகுந்த பக்தியோடு அனுசரித்து தேவ வரப்பிரசாதத்தை அபரிமிதமாகப் பெற்றுக்கொள்வோமாக!

# நமது இரட்சண்யத்தின் சின்னம்!

"நாமோ, நமது ஆண்டவராகிய சேசு கிறீஸ்துநாதருடைய சிலுவையில் மகிமை பாராட்டுவது அவசியம். அவரிடத்தில் நமக்கு இரட்சனையமும், ஜீவியமும், உயிர்த்தெழுதலுமுண்டு; அவரால் நாம் இரட்சிக்கப்பட்டு விடுதலை அடைந்தோம்"

மேற்கண்ட விசுவாச அறிக்கையினை திருச்சபை பெரிய வியாழன் மற்றும் திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள் பூசையில் என இருமுறை பயன்படுத்துகிறது. எதற்காக சிலுவையில் நாம் பெருமை பாராட்ட வேண்டும்? எதற்கெனில், இதிலேதான் நம்முடைய இரட்சண்யம் நிறைவேறியது – இதிலேதான் நாம் ஞானப்பிறப்படைந்தோம் – அதுவேதான் நமது உயிர்ப்புக்கும் காரணமாக இருக்கிறது. இப்படி நமது இரட்சண்யத்தின் சின்னமாகிய திருச்சிலுவையை இந்த உலகம் ஏன், கிறீஸ்தவர்கள் கூட இன்று அலட்சியம் செய்கிறார்கள். நவீன கிறீஸ்தவர்கள் மிக அபூர்வமாகவே சிலுவை அடையாளத்தை வரைகிறார்கள். அப்படி வரைந்தாலும் பக்தியற்று, அலட்சியமாக, மிக அவசரமாக – யாரும் பார்த்தால் கேலி செய்வார்களோ என்று நினைத்தோ அரைகுறையாக, சுருக்கமாக வரைகிறார்கள்.




எதைச் செய்தாலும் சேசுவின் நாமத்தினாலும், அவருடைய சிலுவை அடையாளத்தினாலும் துவங்கும் நல்ல பழக்கம் இன்று அரிதாகி வருகிறது. சிலுவையை தங்களது இல்லங்களில் வைப்பதற்கும் அஞ்சுகிறார்கள். ஆனால் ஆதிக்கிறீஸ்துவர்கள் சிலுவைக்கு உரிய வணக்கத்தையும், மரியாதையையும் தங்களது அன்றாட வாழ்வில் அனுசரித்து வந்தார்கள். இக்காலத்திலோ, கிறீஸ்தவர்கள் சிலுவையை வெறும் அலங்கார பொருளாகப் பயன்படுத்தும் கொடுமையும் நடைபெறுவதை நாம் காண்கிறோம். சிலுவை கற்பிக்கும் ஒறுத்தல், பரித்தியாகம் ஆகியவைகளை, அவற்றை அலட்சியம் செய்பவர்களிடம் காணமுடியாது. ஆனால் திருச்சபை சிலுவையில் பெருமை கொள்ள வேண்டுமென்று நம்மை அழைக்கிறது. எனெனில் தேவ வரப்பிரசாதங்களை – தேவதிரவிய அனுமானங்களை – தேவ அன்பை பெற்றுத்தரும் வாய்க்கால்களான தேவதிரவிய அனுமானங்கள் சிலுவை அடையாளத்தைப் பயன்படுத்தியே நமக்கு அருளப்படுகின்றன.

எப்படியெனில் ஞான உயிரை ஆத்துமத்தில் பிறப்பிக்கும் "ஞானஸ்நானத்தின்" போதும், இஸ்பிரீத்துசாந்துவானவரைப் பெற்று ஞான வாழ்வில் திடமடைய "உறுதிபூசுதல்" பெறும்போதும், பாவத்தால் இழந்த ஞான உயிரை மீண்டும் பெற பாவமன்னிப்பு தரும் "பாவசங்கீர்த்தனத்தின்" போதும் ஆன்ம சரீரத் திடமடையச் செய்யும் "தேவநற்கருணை" வசீகரத்தின் போதும் (திவ்விய பலிபூசையில்), மரண வேளையில் ஆன்ம திடமளித்து, நித்திய வாழ்வை எதிர்கொள்ள உதவும் "அவஸ்தைப்பூசுதலைப்" பெற்றுக்கொள்ளும் போதும், தேவ மக்களை விருத்தியாக்கும் "மெய்விவாகத்தின்" போதும், ஏன்! ஆன்ம இரட்சண்ய அலுவலைத் தொடர்ந்து நிறைவேற்ற அதிகாரமளிக்கும் "குருத்துவத்தின்" போதும் சிலுவை அடையாளமே வரையப்படுகிறது. இப்படியாக, தொட்டில் முதல் கல்லறை வரையிலும் கிறீஸ்தவன் சிலுவை அடையாளத்தால் எண்ணற்ற முறைகளில் ஆசீர்வதிக்கப்படுகிறான். சிலுவை அடையாளமே அவனது கிறீஸ்தவ வாழ்வின் எல்லாமுமாகியுள்ளது. அப்படியிருக்கும் போது கிறீஸ்தவர்கள் சிலுவையை அலட்சியம் செய்யலாமா? கூடாது! சிலுவை அடையாளத்தை பக்தியோடு வரைந்து கொள்வதிலும், சிலுவையை தரித்துக்கொள்வதிலும் இல்லங்களிலே பாடுபட்ட சிலுவையை பிரதான மகிமையான இடத்தில் வைத்து சங்கை செய்யவும் கிறீஸ்தவர்கள் முன்வர வேண்டும்!

### சிலுவை அடையாளத்தால் கிடைத்த வெற்றி!

உரோமையில் கிறீஸ்தவர்கள் 300 ஆண்டுகளாக அஞ்ஞான அரசர்களால் கலாபனைக்கு உள்ளாகி வந்தார்கள். கி.பி.311–ம் ஆண்டு உரோமை இராயனான மார்க்ஸ்யந்தியுஸ் என்பவனை எதிர்த்துப் படையுடன் கிளம்பிய கான்ஸ்டான்டின் அரசனுக்கு திடீரென வானத்தில் ஒளி வீசிப் பிரகாசிக்கும் சிலுவை அடையாளம் தோன்றியது! "இந்த அடையாளத்தால் வெற்றி பெறுவாய்" – "IN HOC SIGNO VINCES" என்ற பொன் எழுத்துக்கள் சிலுவையினடியில் பொறிக்கப்பட்டிருந்ததை கான்ஸ்டான்டின் மன்னன் கண்டான்!

அன்றிரவில் நமதாண்டவர் அதே சிலுவையைக் கையில் ஏந்தியவராகக் கான்ஸ்டான்டினுக்கு காட்சியளித்து, "எனது சிலுவை அடையாளத்தை செய்து போர்க்களத்திற்கு கொண்டு செல். இது உனது வெற்றியின் அடையாளம்!" என்று கூறி மறைந்தார். மன்னனும் கீழ்ப்படிந்து சிலுவை அடையாளத்தை எங்கும் பொறித்தான். அதனைப் போர்க்களத்திற்கு எடுத்துச் சென்றான். மாபெரும வெற்றி பெற்று உரோமை சக்கரவர்த்தியானான். கிறீஸ்தவர்களும் துன்பங்கள் நீங்கி சுயாதீனம் பெற்றனர்.

கி.பி.335–ல் கிறீஸ்தவளான கான்ஸ்டான்டின் பேரரசனின் அன்னையான அர்ச். ஹெலனம்மாள் ஜெருசலேமுக்குச் சென்று நமதாண்டவர் பாடுபட்ட உண்மையான திருச்சிலுவையைக் கண்டுபிடித்து உரோமைக்கு பக்தி வணக்கத்துடன் கொண்டு சென்று மாபெரும் தேவாலயத்தில் ஸ்தாபித்தார். அதன் நினைவாகவே **திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள்** கொண்டாடப்பட்டு வருகிறது.

# வேதனைக் கடலில் அமிழ்ந்த மாதா!

நமதாண்டவருடைய திருப்பாடுகளை தபசு காலத்திலும், முக்கியமாக பரிசுத்த வாரத்திலும் நாம் தியானிக்கிறோம். அதுபோல, அவரது பரிசுத்த மாதாவின் வியாகுலங்களை திருப்பாடுகளின் வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமையன்றும், செப்டம்பர் மாதம் 15–ம் நாளன்றும் நினைவு கூர்கிறோம். சத்தியத் திருச்சபையும் சேசுவின் திருப்பாடுகளோடு, மாதாவின் வியாகுலங்களையும் சேர்த்து தியானிக்கும்படி ஆசிக்கிறது. ஏனெனில் சேசுவினுடையவும், மரியாயினுடையவும் பாடுகள் நமது பேரில் அவர்கள் கொண்டிருக்கும் அன்பிற்கு அடையாளமாகத் திகழ்கின்றன.

எப்படியெனில் நமதாண்டவர் நமது ஆன்ம இரட்சண்யத்திற்காகவே மனிதாவதாரம் எடுத்து சிலுவைச் சாவை நோக்கி சென்று பாடுகளை அனுபவித்து இரட்சண்யக் கிரயமாக தமது திரு இரத்தத்தைச் சிந்தி மீட்பை நமக்குப் பெற்றுத் தந்தார். அதுபோல, பரிசுத்த கன்னிமரியாயும் நமது மீட்புக்கான சர்வேசுரனின் திட்டத்தில் தேர்ந்து கொள்ளப்பட்டு, அமலோற்பவமாகப் பிறப்பிக்கப்பட்டு, மீட்பரின் தாயாகி, அவரது வாழ்வு முழுவதிலும் ஏன்? இறுதியில் கல்வாரிமலை மட்டும் அவரோடு இருந்து அவரது பாடுகளில் பங்கேற்றார்கள். ஆகையால் அவர்கள் நமது இணை இரட்சகியானார்கள் (Co-Redemptrix).



தேவமாதாவின் பாடுகள் சேசுவின் மனிதாவதாரத்தோடு இணைந்த ஒன்று. ‘‘மரியாயின் பாடுகள் அவர்களது பிறப்பிலிருந்தே துவங்கியது. மரியாயின் துயரமும் அவர்களது திருக்குமாரனை ஒத்திருந்த அவர்களது வாழ்வு முழுவதிலும் வேதசாட்சியம் போலிருந்தது’’ என்கிறார் அர்ச். பெர்னார்டு.

### மாதாவின் வியாகுலங்களைத் தியானிப்பதால் வரும் நன்மைகள்:

தேவதாயின் வியாகுலங்களைத் தியானிக்கும் பக்திமுயற்சி மிகவும் தொன்மையானது. கிறீஸ்தவர்கள் சேசுவின் பாடுகளோடு, மாதாவின் வியாகுலங்களையும் தியானித்து நேசித்து வந்தார்கள். அவற்றைத் தியானிப்பதால் அளவற்ற நன்மைகளைப் பெறுகிறோம். அவை (1) நமதாண்டவருடைய பாடுகளில் ஐக்கியப்படுவதற்கு மேலான வழி மாதாவின் வியாகுலங்களைத் தியானிப்பதே. அதற்காகவே திருச்சபை மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு திருநாட்களை ஏற்படுத்தியுள்ளது.

(2) நம் மீது சேசுவும் மாதாவும் கொண்டிருக்கும் அன்பை அறிந்து கொள்ள மாதாவின் வியாகுலம் உதவுகிறது. சிலுவையில் ஊடுருவப்பட்ட நமதாண்டவரின் இதயத்தோடு இணைந்து துயரம் அனுபவித்த ஒரு இருதயம் இருக்குமானால் – சேசுவின் எண்ணங்களுக்கு ஒத்த, அதே கண்ணோட்டத்தைக் கொண்ட ஆன்மா இருக்க முடியுமானால் அது மரியாயின் துயர வாள் ஊடுருவிய இருதயமும், அவர்களது பரிசுத்த ஆத்துமமுமே. தங்களுக்காக பாடுகளையும் துயரங்களையும் அனுபவிக்கத் தேவையில்லாத இந்த இருவரும் – மனுக்குலத்தின் இரட்சண்யத்திற்காக பாடுகளையும் வியாகுலங்களையும் அனுபவித்தார்கள். அவை நம் மீது சேசுவும் மாதாவும் கொண்டிருக்கும் அன்பை எடுத்துரைக்கின்றன. நம்மையும் பிரதியன்பு பாராட்டவும் நன்றியறிந்திருக்கவும் செய்கின்றன.

### வேதசாட்சிகளின் வேதனைகளும் மாதாவின் வியாகுலங்களும்:

மாமரி அனுபவித்த துயரங்களுக்கு முன்பாக வேதசாட்சிகளின் வேதனைகள் யாவும் ஒன்றுமேயில்லை எனலாம். வேதசாட்சிகள் சரீரத்தில் மட்டுமே வேதனைப்பட்டார்கள். தேவ வரப்பிரசாதமானது அவர்களது வேதனையின் உக்கிரத்தைத் தணித்தது; வேதனைகளைக் கவர்ச்சிகரமாக்கியது; அதனாலேயே தான் அவர்கள் மிகக்கொடிய வேதனைகளின் மத்தியிலும் மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். வெற்றி வீரர்கள் போல் காணப்பட்டார்கள். ஆனால் மரியாயின் ஆத்துமமோ வியாகுலம் என்னும் வாளால் ஊடுருவப்பட்டது. அதைத் தணிக்க எவ்வித ஆறுதலுமில்லை. எத்தனை குரூர உபாதை! தன் மகன் தன் கண் முன்பாகவே சிலுவையில் கொடூரமாக அறையப்பட்டு உயிர் விடுவதைக் காணும் தாய் எப்பேர்ப்பட்ட வேதனைகளை அனுபவித்திருப்பாள்! அப்படியானால் மாதா எந்த அளவிற்கு உபாதிக்கப்பட்டிருப்பார்கள்; வேதனைப்பட்டிருப்பார்கள்! அதோடு தனது திருக்குமாரனின் பாடுகளையும் இரத்தத்தையும் விரயமாக்கி, பாவம் செய்து நரகத்திற்கு தங்களையே வீழ்த்துகிறவர்களைக் குறித்தும் மாதாவின் துயரம் அதிகமாயிற்று.

இப்படியான **வேதனைக் கடலில் அமிழ்ந்திருந்த மாதா**, அந்தத் துயரமான வேளையிலும் பொறுமை, இறுதிவரை நிலைத்திருத்தல், பரித்தியாகம், தாழ்ச்சி போன்ற கிறீஸ்தவப் புண்ணியங்களை அனுசரித்தார்கள். நாமும் நம் வாழ்வில் வரும் துன்பத்துயரங்களை பொறுமையோடு ஏற்றுக்கொண்டு வாழ வியாகுலமாதாவின் உதவியை மன்றாடுவோமாக!

# " Ecce Sacerdos Magnus......inventus est Iustus"

# " பெரிய குரு இவரே ...... அவர் நீதிமானாகக் காணப்பட்டார்."

20-ம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற பாப்பரசர், சத்திய விசுவாசத்தின் பாதுகாவலர், நவீன தப்பறையை நசுக்கும் சம்மட்டி, நற்கருணையின் பாப்பரசர் என்றெல்லாம் போற்றிப் புகழப்பட்ட பாப்பரசர் அர்ச். பத்தாம் பத்திநாதர், இத்தாலி நாட்டில் வெனீஸ் நகருக்கு அருகேயுள்ள ரியேஸ் (Riese) என்ற சிறு கிராமத்தில் தபால் காரரான ஜீயோவானி பாப்திஸ்தா சார்த்தோ என்பவருக்கும், மார்க்கரித்தா சான்சோன் சார்த்தோ என்ற அம்மையாருக்கும் 8 குழந்தைகளில் மூத்த மகனாக 1835 ஜூன் 2-ம் நாளன்று பிறந்தார். அவருக்கு **ஜோசப் மெல்கியோர் சார்த்தோ** என்று பெயர் சூட்டிய பெற்றோர் மிகுந்த விசுவாசமுள்ளவர்களாகவும், கடின உழைப்பாளிகளாகவும் இருந்தனர். ஏழைகளானாலும் தங்கள் குழ்ந்தைகளை விசுவாசத்திலும் கிறீஸ்தவ புண்ணியத்திலும் வளர்த்தார்கள்.

சிறு வயதிலேயே ஆழ்ந்த விசுவாசமும், அறிவுத்திறனும் பெற்றவராகத் திகழ்ந்த சிறுவன் சார்த்தோவுக்கு பங்குத்தந்தை டான் டிட்டோ சுவாமி லத்தீன் மொழி கற்றுக்கொடுத்தார். அதில் சிறந்து விளங்கிய அவனை தமது செலவிலேயே 4 மைல் தூரத்திலிருந்த **காசல்ப்ராங்கோ** என்ற ஊரில் உள்ள பள்ளிக்கு அனுப்பினார். தினமும் 4 மைல் தூரம் நடந்து கல்வி கற்று வந்த அவன் குடும்பத்தின் ஏழ்மையை உணர்ந்திருந்தான். அது எந்த அளவிற்கென்றால், தான் போட்டிருக்கும் சாப்பாத்துக்கள் தேய்ந்து கிழிந்து விடக் கூடாது என்பதால் அநேக நாட்களில் அவைகளைக் கழற்றி தோளில் கட்டித் தொங்க விட்டுக் கொண்டு வெறும் காலில் உறை பனியையும் பொருட்படுத்தாமல் நடந்து செல்வான் !

## குருப்பட்டம்

அந்த இளம் வயதிலேயே சிறுவன் சார்த்தோவுக்கு தாம் குருவாகி சர்வேசுரனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற ஆவல் நிரம்பியிருந்தது. உயர் கல்வியையும் நன்கு கற்று தேர்ந்த அவனுக்கு, இம்முறையும் பங்குத்தந்தையே உதவிகரம் நீட்டினார். எப்படியெனில் வெனீஸ் பிதாப்பிதா வழங்கிய உபகார நிதியை (Scholership) சார்த்தோவுக்கு வாங்கி கொடுத்து பதுவா நகரின் குருமடத்திற்கு அனுப்பினார். ஏழைப் பெற்றோர்களும் தங்களது மூத்த மகனின் தேவ அழைத்தலுக்கு எந்த விதமான தடங்களும் செய்யாது, மகிழ்ச்சியோடு அவனை சர்வேசுரனுக்கென அர்ப்பணித்தனர். குருமடத்திலும் மிகவும் நேர்த்தியாக பயின்று முதல் மாணவனாகத் திகழ்ந்த சார்த்தோ 1858- செப்டம்பர் 14-ம் தேதி குருப்பட்டம் பெற்றார். இதற்கிடையில் அவரது தந்தை மரணமடைந்தார். ஆனாலும் மகனை குருத்துவ கல்வியில் தொடரச் செய்த தாய், மகன் குருவானதைக் கண்டு மிகவும் மகிழ்ந்தாள்.

குருவாகிய சார்த்தோ சுவாமி முதன் முதலாக துணைப்பங்கு குருவாக **தொம்போலோ** என்ற கிராமத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு தமது குருத்துவப்பணியில் ஈடுபட்ட அவர், ஏழைகளையும் வியாதியஸ்தர்களையும் சந்தித்து உதவிகள் புரியலானார். ஓய்வு நேரங்களில் அர்ச். தாமஸ் அக்வினாசின் வேதசாஸ்திரம், திருச்சபைச் சட்டம் என கற்று தன்னை பெரிதும் வளப்படுத்திக் கொண்டார். 1873- அங்கு காலரா நோய் பரவியது. அக்காலத்தில் மருத்துவ வசதியில்லாததால் அந்நோயின் தாக்கம் அதிகமிருந்தது.



பாப்பரசர் அர்ச். பத்தாம் பத்திநாதர்

நோயாளிகளைத் தேற்றுவதிலும், மரித்தவர்களை நல்லடக்கம் செய்வதிலும் ஈடுபட்ட பங்குத் தந்தை சார்த்தோ சுவாமி அம்மக்களின் துன்பத்தில் உறுதுணையாக நின்று உதவினார். பங்கில் சிறுவர்களுக்கு ஞானோபதேசம் கற்றுக்கொடுக்கவும் , ஆலயத்தில் கிரகோரியன் இசையை பாடவும் முக்கியத்துவம் கொடுத்தார்.

1875-ல் திரெவிசோ மேற்றிராணியாரின் ஆலோசனை சபையின் தலைவராகவும், மேற்றிராசன ஆலய சிரேஷ்ட குருவாகவும், குருமடத்தின் ஆன்ம இயக்குனராகவும் நியமிக்கப்பட்டார். புதிய குருக்களை உருவாக்குவதென்றால் அவருக்கு மிகவும் பிரியமானதால், அவர்களை சிறப்பாக வழிநடத்தினார். விசுவாசத் தளர்ச்சிக்குக் காரணம் ஞானோபதேசம் சரிவர அறியாததே என்று நம்பிய சார்த்தோ சுவாமி அதற்கு ஏற்பாடுகள் செய்தார். பகலில் எவ்வளவு அலுவல்கள் இருப்பினும், இரவில் அதிக நேரம் படிப்பதிலும், எழுதுவதிலும் செலவிட்டார். 1883-ல் மாந்துவா மேற்றிராணியாராக, பாப்பரசர் 13-ம் சிங்கராயரால் நியமிக்கப்பட்டார். குழப்பங்களும், சச்சரவுகளும் நிரம்பிய அங்கு தமது புத்திக் கூர்மையாலும், நன்மாதிரிகையாலும் அவைகளை அடக்கி, அம்மக்களின் அன்பைப் பெற்றார். அங்கும் குருக்களின் கல்வியிலும், ஞான வாழ்விலும் அக்கரை கொண்டார். அதற்கான அநேக முயற்சிகளில் ஈடுபட்டார்.

## கர்தினாலும், பிதாப்பிதாவும்

சார்த்தோ ஆண்டகையின் அறிவுத்திறனையும், உழைப்பையும் பரிசுத்த ஜீவியத்தையும் கண்ட பாப்பரசர் அவரை வெனிஸ் நகரின் கர்தினாலாக 1893-ல் நியமித்தார். அதோடு 3 நாட்களில் பிதாப்பிதாவாகவும் உயர்த்தப்பட்டார். அக்காலத்திலும் இத்தாலிய அரசாங்கத்தில் இரகசிய சபையினரின் ஆதிக்கம் அதிகமிருந்ததால் திருச்சபைக்கு எதிர்ப்பு அதிகமிருந்தது. ஆனால் அவைகளை மிகவும் மதிநுட்பத்தோடு அடக்கி திருச்சபையின் உரிமைகளை நிலைநாட்டினார். தேவாலயங்களில் கிரகோரியன் இசையில் பாடவேண்டும் என்ற வழக்கத்தை ஏற்படுத்தினார். குருமடங்கள் மீதும், குருக்களை பயிற்சிவிக்கும் ஆசிரியர்களைத் தேர்வு செய்வதிலும் மிகவும் கருத்தாக இருந்தார்.

இதற்கிடையில் 94 வயதையடைந்த பாப்பரசர் 13-ம் சிங்கராயர் மரணமடைந்தார். அதனால் புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்க கர்தினால்மார்களின் இரகசிய கூட்டம் நடைபெற்றது. சார்த்தோ கர்தினாலும் அதில் கலந்து கொண்டார். வாக்கெடுப்பில் கர்தினால் ராம்போலோ அதிக வாக்குகள் பெற்றிருந்தாலும், ஆஸ்திரியா அரசரின் "இரத்து" (Veto) அதிகாரத்தால் அவரது தேர்வு இரத்து செய்யப்பட்டது ! ஏனெனில் அவர் இரகசிய சபையினரோடு தொடர்பு கொண்டவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்பு நடந்த வாக்கெடுப்பில் அதிக வாக்குகள் பெற்று சார்த்தோ கர்தினால் ஆண்டகையே பாப்புவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## பாப்பரசர் பத்தாம் பத்திநாதர்

1903- அகஸ்ட் 9-ம் நாளன்று பாப்பரசராக மகுடம் சூட்டப்பட்ட அவர், தமது பெயரை பத்திநாதர் என்று தேர்ந்தெடுத்தார். அதற்கு அவர் கூறிய காரணம்: இதற்கு முன்பாக பத்திநாதர் (Pius) என்ற நாமம் கொண்ட பாப்பரசர்கள் திருச்சபைக்காக அதிகம் பாடுபட்டு துன்புற்றிருக்கிறார்கள். அது போல, தாமும் திருச்சபைக்கு அயராது பாடுபட வேண்டும் என்பதே ! ஒரு குக்கிராமத்து, ஏழை தபால்காரரின் மகன் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை கண்ட அரசியலாளர்கள் - புதிய பாப்பரசர் எப்படி இருப்பாரோ, அவரது செயல்பாடுகள் எத்தன்மையதோ என்று சந்தேகம் கொண்டிருந்தார்கள், அவர் பலநாட்டு தூதர்களையும், அரசு உயரதிகாரிகளையும், பலநாட்டு மன்னர்களையும் வரவேற்றதில் காணப்பட்ட அவரது உண்மையான ஞானத்தையும், நிர்வாகத்திறனையும் கண்டு வியந்து போயினர். எப்போதும் எளிமையையே விரும்பும் பாப்பரசர், தாம் கிறீஸ்துநாதரின் பிரதிநிதி என்ற தமது அந்தஸ்தின் நிமித்தம் அனைத்து ஆடம்பரங்களையும், ஒறுத்தல் பரிகாரமாக ஏற்றுக் கொண்டார். தாம் குருவாயிருந்த போதே தமக்கு உணவு தயாரிக்க தமது திருமணமாகாத 3 சகோதரிகளை தம்மோடு இருத்திக்கொண்டவர், பாப்புவான பிறகும் அதனையேத் தொடர்ந்தார். இதன்மூலம் உணவில் மட்டசனத்தைக் கடைப்பிடித்தார்.

## கிறீஸ்துவில் சகலத்தையும் புதுப்பித்தல் !

1903 அக்டோபர் 4-ம் நாள் Supremi Apostolatus என்ற தமது முதல் அப்போஸ்தல கடிதத்தில் தமது ஆட்சியின் நோக்கத்தையும், திட்டத்தையும் விரிவாக வெளியிட்டு அதில், இரத்தின சுருக்கமாக " அனைத்தையும் கிறீஸ்துவில் புதுப்பிப்பதே" ; " INSTAURARE OMNIA IN CHRISTO" என்ற நோக்கத்தை வெளியிட்டார். அதன்படியே பாப்புவாக இருந்த 11 வருடங்களில் "சகலத்தையும் கிறீஸ்துவில் புதுப்பிப்பதே" அவரது பணியாக இருந்தது.

## திருச்சபையின் உரிமைகளின் காப்பாளர் !

பாப்பரசர் தேர்வில் அரசியல் குறிக்கீடுகள் இருக்கக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்த பாப்பரசர் முதன்முதலில் அரசர்களுக்கு வழங்கப்பட்ட இரத்து "Veto" அதிகாரத்தை நீக்கினார். மேற்றிராணிமார்கள் நியமனத்தில் பிரான்ஸ் நாடு கொண்டிருந்த அதிகாரத்தை மாற்றி 1906-ல் 14 மேற்றிராணிமார்களை நியமித்தார். அதனால் கிளம்பிய எதிர்ப்புகளை அடக்கினார். பலநாடுகளில் திருச்சபைக்கெதிராக கிளம்பிய சக்திகளை பல நிருபங்களை எழுதியும், நடவடிக்கைகளை எடுத்தும் ஒடுக்கினார்.

## நவீனத் தப்பறைகளை நசுக்கும் சம்மட்டி!

அர்ச். பத்தாம் பத்திநாதர் செய்த மிகப் பெரிய சாதனை அக்காலத்தில் தலைதூக்கிய நவீனத் தப்பறையை (Modernism) அடித்து நொறுக்கியதே. மாறாத விசுவாச சத்தியங்களை காலத்திற்கேற்ப மாற்ற வேண்டும் என்பது போன்ற விஷத்தை பரப்பி, வேதசத்தியங்களேயே அழிக்கத் தேடிய "நவீனத்தை" - அதன் கொள்கைகளை 65 தனி வாக்கியங்களாகப் பிரித்து அதன் தீமைகளைத் தோலுரித்துக் காட்டி 1907- ஜுலை 3 ல் "Lamentabili" என்ற தப்பறையின் அட்டவணையையும் வெளியிட்டார். பின்னர் இரு மாதங்களுக்குப் பிறகு செப்டம்பர் 8-ம் நாள் நவீனத்தைக் கண்டனம் செய்து "Pascendi Domini Grigris" என்ற தமது புகழ்பெற்ற அப்போஸ்தல நிருபத்தையும் வெளியிட்டார். இவை வெளியிடப்பட்டு இந்த ஆண்டோடு 100 வருடங்கள் ஆகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் புத்தி விவரம் அறிந்த உடனேயும், பெரியவர்கள் அடிக்கடியும் ஏன், தினமும் தேவ நற்கருணை உட்கொள்ள உத்தரவளித்து "Quam singulari" என்ற நிருபத்தை வெளியிட்டதால் "நற்கருணையின் பாப்பரசர்" என்று அழைக்கப்பட்டார். திருச்சபை முழுவதும் தேவாலயங்களில் கிரகோரியன் இசையை இசைக்கச் செய்ய 1903-ல் அதற்கான மடல் ஒன்றை எழுதி, அந்த உந்நதமான இசையை மெருகூட்டும் பணியை பிரான்ஸ் நாட்டு ஆசீர்வாதப்பர் சபையினரிடம் ஒப்படைத்தார். * (கிரகோரியன் பாடல்கள் அடங்கிய CDகள் நம்மிடம் கிடைக்கும். காண்க இவ்விதழின் 9-பக்க விளம்பரத்தை)

## இறப்பும், அர்ச். பட்டமும்

திருச்சபைச் சட்டங்களைத் (Canon Law) தொகுத்து வெளியிடும் பணியையும் துவக்கினார். ஆனால் அது அவரது காலத்தில் முற்றுப்பெறவில்லை. இன்னும் பல துறைகளிலும் அயராது உழைத்த பாப்பரசர் அக்காலத்தில், திடீரென சூழ்ந்த போர் மேகங்களைக் கண்டு அதனைத் தடுக்க பல இராஜாங்க முயற்சிகளை மேற்கொண்டார். ஆனாலும் முதல் உலக யுத்தம் துவங்கியது. யுத்தத்தால் ஆன்ம இழப்புகள் ஏற்படுமே என்று வருந்திய பாப்பரசர் அந்த துயரங்களினாலேயே சுகவீனமடைந்து 1914 ஆகஸ்ட் 20-ம் நாள் மரணமடைந்தார். தமது இறுதி சாசனத்தில் "..... நான் ஏழையாப் பிறந்தேன், ஏழ்மையிலேயே வாழ்ந்தேன், ஏழையாகவே மரிக்க விரும்புகிறேன். " அவரால் நடந்த புதுமைகளால் வாழும் போதே "அர்ச்சிஷ்டவர்" என்று புகழப்பட்ட பத்தாம் பத்திநாதருக்கு 1954 மே, 29-ம் நாள் பாப்பரசர் 12-ம் பத்திநாதரால் அர்ச்சிஷ்டப்பட்டம் கொடுக்கப்பட்டது. அழியாத இவரது சரீரம், ரோமை அர்ச். இராயப்பர் பேராலயத்தின் இடதுபக்க பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது!

**அர்ச். பத்தாம் பத்திநாதரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!



**[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]**



**பிரவேச வாக்கியம் வாசித்தல்**

### பூசை ஆரம்பம் (தொடர்ச்சி)

**– பிரவேச வாக்கியம் –**

**(The Introit)**

### தூபம் காட்டும் சடங்கு!

குருவானவர் பீடத்தை அடைந்து, அதனை பக்தியோடு முத்தி செய்வதோடு "பீடத்தினடியில் ஆயத்த ஜெபங்கள் **(Prayers at the foot of the Altar)** நிறைவு பெறுகிறது. பின்னர் குரு நிருபப் பக்கம் (இடது பக்கம்) சென்று பூசைப்புத்தகத்தில் உள்ள அன்றைய பூசையின் பிரவேச வாக்கியங்களைச் சொல்லிக்கொண்டே தம் மீது சிலுவை அடையாளம் வரைந்து கொள்வார்.

ஆனால் ஆடம்பர பூசையாக இருந்தால் **(Missa Solemnis)** குரு நிருபப்பக்கம் செல்லாமல் உடனடியாக தூபம் காட்டும் சடங்கை நிறைவேற்றுவார். இதில் தியோக்கன் மற்றும் உபதியோக்கன்மார்கள் பங்கேற்பார்கள்.

இப்போது தியோக்கன் ''சங்கைக்குரிய தந்தையே, ஆசீர்வதித்தருளும்'' என்று சொல்லிக்கொண்டு சாம்பிராணியைக் கொடுக்கிறார். குரு, தூபக்கலசத்தில் சாம்பிராணியைப் போட்டு "யாருடைய மகிமைக்காக நீ எரிக்கப்படுவாயோ, அவராலேயே நீ + ஆசீர்வதிக்கப்படுவாயாக'' என்று சொல்லிக்கொண்டு சிலுவை அடையாளத்தால் ஆசீர்வதித்து, பாடுபட்ட சுரூபத்திற்கும், பீடத்திற்கும் தூபம் காட்டுவார். அதன் பின் தியாக்கோன் குருவுக்கு தூபமிடுவார். இச்சடங்கு மரித்தோர் பாடற்பூசையில் நிறைவேற்றுவதில்லை.

தூபம் காட்டுவது தேவ ஆராதனையின் அடையாளமாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டு காலத்தில் யெகோவாகிய சர்வேசுரனை சங்கைச் செய்ய அவரது ஆணைப்படியே இப்பழக்கம் ஏற்பட்டது. தேவபாலனை ஆராதிக்க வந்த மூன்று ஞானிகள் தூபத்தையும் கொண்டு வந்தார்கள் என்பது இங்கு நினைவு கூறத்தக்கது! (காண்க மத். 2:11). ஆனால் பூசை ஆரம்பத்தில் தூபமிடும் பழக்கம் கீழை நாடுகளில் 4-ம் நூற்றாண்டிலும், மேலை நாடுகளில் 12-ம் நூற்றாண்டின் மத்தியிலும் தான் ஆரம்பமானது.

ஆராதனையின் அடையாளமான தூபம் காட்டுவது திருப்பலி சடங்கானது பரிசுத்தமானது என்பதையும், விண்ணை நோக்கி உயரே எழும்பும் தூபப் புகை பீடத்தையும் அதன் சந்நிதானத்தையும் பரிமள வாசனையால் நிரப்பி தேவனுக்கு செலுத்தப்படும் பக்திவணக்கமாகவும், மகிமையாகவும் திகழ்கிறது. அதோடு விசுவாசிகளின் ஜெபங்களும், மன்றாட்டுகளும் தூபப் புகையைப் போல மேலே எழும்பி மோட்சத்தில் சர்வேசுரனின் சந்நிதியை அடைகிறது என்பதன் அடையாளமாகவும் இந்தத் தூபம் காட்டும் சடங்கு அமைகிறது. (காண்க காட்சி. 8:3).

தூபமானது இரண்டு பிரிவுகளாக காட்டப்படுகிறது. (1) பிரவேச வாக்கியத்திற்கு முன்பாக; (2) விசேஷ பலிக்கிருத்தியங்களுக்கு முன்பாக என தூபம் காட்டும் சடங்கு நிகழ்கின்றன. முதல் பிரிவான, பிரவேச வாக்கியத்திற்கு முன்பாகவும், அதன் பின் தொடர்ந்து சுவிசேஷம் வாசிக்கும் முன்பாக தூபம் காட்டப்படுகிறது. இது 'சுவிசேஷ வார்த்தைகளில்' ஆண்டவருடைய பிரசன்னத்தைச்

சுட்டிக்காட்டுவதாக உள்ளது! இரண்டாம் பிரிவில் ஒப்புக்கொடுத்தல் வாக்கியத்திற்கு **(Offetorium)** முன்பாகவும், வசீகரம் செய்யப்படும்போதும் தூபம் காட்டப்படுகிறது. இது திவ்விய நற்கருணையில் ஆண்டவருடைய பிரசன்னத்தை உணர்த்துவதாக அமைகிறது! **பூசையில் தூபம் காட்டுவது ஆடம்பர பூசையில் மட்டுமே நடைபெறுகிறது.**

### பிரவேச வாக்கியம்

பிரவேசம் "The Introit" என்றால் நுழைதல், பிரவேசிப்பது, அறிமுகமாதல் என்று பொருள்படும். பீடத்தினடியில் சொல்லப்படும் ஜெபங்கள் என்றும் மாறாதவை. ஆனால் பிரவேச வாக்கியமானது பூசையின் வகைகளுக்கு ஏற்ப மாறும். இது திருவழிப்பாட்டு காலத்திற்கேற்பவும், பூசையின் கருத்துகளுக்கு ஏற்பவும், அர்ச்சிஷ்டவர்களின் திருநாட்களுக்குத் தக்கவாறும் வேறுபடும்.

இந்த பிரவேச வாக்கியம் பூசையில் பங்கேற்கும் விசுவாசிகளின் பக்தியார்வத்தையும், பரிசுத்த நினைவுகளையும் ஆவல்களையும் தூண்டி நடைபெறவிருக்கும் தெய்வீகப் பரமஇரகசியத்தில் (Divine Mystery) தக்கபடி பங்கேற்கச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டன. இவை பாடற்பூசையின் பக்தியைத் தூண்டி எழுப்புவதற்காக இசையாக (Chants) இசைக்கப்படுகின்றன.

பிரவேச வாக்கியம் பெரும்பாலும் சங்கீதங்களிலிருந்தும், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்டவையாகவும் சில, திருச்சபையால் இயற்றப்பட்டவையாகவும் இருக்கின்றன. இதில் பிரவேச வாக்கியம் சங்கீதங்களிலிருந்து எடுக்கப்பட்டால் அது ஒழுங்குகிரமமான பிரவேச வாக்கியம் (Introitus Regulares) என்றும்; மற்றவைகள் ஒழுங்குகிரமமற்ற பிரவேச வாக்கியம் (Introitus Irregulares) என்றும் அழைக்கப்படும்.


- மகிழ்ச்சிகரமான ஈஸ்டர், கிறீஸ்து பிறப்பு காலங்களில் "அல்லேலுயா" என்ற வார்த்தை இரண்டு அல்லது மூன்று தடவைகள் பிரவேச வாக்கியங்களுக்குப் பிறகு சொல்லப்படும்.

- துயரத்தைக் குறிக்கும் பாடுகளின் காலம், பரிசுத்த வாரம் மற்றும் துக்கப்பூசைகளில் "Judica me" என்ற ஜெபம் சொல்லப்படுவதில்லை. அப்பூசையில் பிரவேச வாக்கியத்திற்குப் பிறகு சொல்லப்படும் "பிதாவுக்கும் சுதனுக்கும்... Gloria Patri..." என்ற திரித்துவ ஆராதனை ஜெபம் சொல்லப்படுவதில்லை.

பிரவேச வாக்கியத்தின் முதல் வார்த்தைகளைச் சொல்லும்போது குரு தன் மீது சிலுவை அடையாளம் வரைந்து கொள்வார். ஏனெனில் பூசையின் வகைக்கு ஏற்ப பிரவேச வாக்கியம் மாறுபடும் என்பதால் அந்தந்த பூசை அந்தந்த பிரவேச வாக்கியத்தின் முதல் வார்த்தையால் அழைக்கப்படும் முக்கியத்துவத்தைக் குறிக்கவே குரு சிலுவை அடையாளம் வரைகிறார். உதாரணமாக மரித்தோர் பூசை "Requiem..." Mass என்றும், ஆகமன காலத்தில் மாதாவுக்கு மகிமையான நேர்ச்சைப் பூசை "Rorate..." Mass என்றும், சில ஞாயிறு பூசைகளும் பிரவேச வாக்கியத்தின் முதல் வார்த்தையால் அழைக்கப்படுகின்றன.

ஆனால் துக்கப்பூசையில் குருவானவர் சிலுவை அடையாளத்தை தன் மேல் வரைவதற்குப் பதிலாக, பூசைப் புத்தகத்தின் மேல் வரைந்துகொண்டே "நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்; ஆண்டவரே, முடிவில்லாத ஒளி இவர்கள் மீது ஒளிர்வதாக" என்று மன்றாடுகிறார். இந்த சிலுவை அடையாளம் பூசைப் புத்தகத்திற்கு அல்ல. ஆனால் உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காகவே என்பதை அறிந்துகொள்வோமாக!

(தொடரும்)





**கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான**

**கிரகோரியன் லத்தீன் பாடல்களின் ஒலித்தட்டு!**

**நமது இதயத்தை சர்வேசுரனை நோக்கி மேலே எழுப்ப வல்ல கத்தோலிக்கத் திருச்சபையின் பாரம்பரிய திரிதெந்தீன் திவ்விய பலிபூசையில் பாடப்படும் லத்தீன் மொழி கிரகோரியன் பாடல்கள்** (Gregorian Chant) **அடங்கிய ஒலித்தட்டுகள்** (CD) **வெளிவந்து விட்டன!**

**இவை 8 பிரிவுகளாக (Volumes) 17 ஒலித்தட்டுகள் கொண்டது.**
**இதன் விலை ரூ.530/— மட்டுமே (தபால் செலவு உட்பட)**

**கிடைக்குமிடம்: அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை, பாளையங்கோட்டை.**

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

**(தேவதாயின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)**

## (4) கிறிஸ்துவினுடைய மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பரிசுத்த கன்னிமரியாயை **"சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே"** என்று அழைப்பதில் அவர்களுடைய அனைத்து மகத்துவமும், மகிமையும் அடங்கியுள்ளது. எனினும் மாதாவை **"தேவதாய்"** என்று அழைப்பதன் முழுப் பொருளையும் அற்ப மனிதன் தனது சொற்பப் புத்தியினால் கண்டுபிடிக்க முடியாது. எனவேதான் தேவனாயிருந்தும், மனிதனாகப் பிறந்த கிறிஸ்துநாதரைப் பெற்றவர்கள் என்ற உண்மையை எளிமைப் படுத்தி **"கிறிஸ்துவினுடைய மாதாவே"** என்னும் சிறப்புப்பட்டத்தால் எடுத்துக்காட்டுகிறது தாய்த் திருச்சபை.

**"சேசு"** என்பது நமதாண்டவரின் ஆள் பெயர். அதன் ஹீப்ரு பாஷையின் கிரேக்க மொழிபெயர்ப்பின் சொல் **ஜோஷ்வா (Joshua)** என்பதாகும். அது ஜோகோவா, அதாவது **இரட்சகர்** என்று பொருள்படும். **கிறீஸ்து** என்பது ஆண்டவரின் அடைமொழி – தகுதியானப் பட்டப்பெயர் ஆகும். கிறிஸ்து என்ற சொல் **"மெசியா"- "அபிஷேகம் செய்யப்பட்டவர்"** என்று பொருள்படுகிறது. அபிஷேகம் செய்யப்படுதல், சுவிசேஷத்தில் அநேக இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சேசுநாதர் சுவாமி கிறீஸ்துவான – மெசியா – அபிஷேகம் செய்யப்பட்டவர். மனுக்குல மீட்பு என்ற அலுவலுக்காகவே பரமபிதாவினால் ஏற்படுத்தப்பட்டவர் என்பதை உணர்த்தவே நமதாண்டவர் **"கிறீஸ்து"**என்றப் பட்டத்தால் அழைக்கப்படுகிறார்.



### சேசுயின் உயர்வு, தாய்க்கு மகிமை!

தாம் பெற்ற மகனின் நற்குணங்களாலும், சிறந்த பிறர்சிநேகச் செயல்களாலும் ஒரு தாய் உலகத்தாரால் போற்றப்படுவதையும், புகழப்படுவதையும் காண்கிறோம். கன்னிமரியாயோ, தேவ சுபாவத்தையும், மனித சுபாவத்தின் சகல நற்பண்புகளையும் சம்பூரணமாகக் கொண்ட சேசுநாதரை தமது ஏகக்குமாரனாக ஈன்றவர்கள். இதனாலேயே தேவதாயின் மகிமையையும், பெருமைகளையும் வரையறுத்துச் சொல்வது என்பது முடியாத காரியமாக உள்ளது. ஒரு மகனின் உயர்வு, அவரது தாயின் மகிமையலங்காரமாகத் திகழ்கிறது. இதனால்தான் ''உம்மைத் தாங்கின உதரமும், நீர் பாலுண்ட கொங்கைகளும் பாக்கியம் பெற்றன'' என்று சுவிசேஷத்தில் தேவதாய் போற்றப்படுகிறார்கள்.

### கிறீஸ்துவின் உயர்வு!

நமதாண்டவர் சேசுகிறீஸ்து மெய்யான தேவனும், மெய்யான மனிதனுமானவர். அவரே ஞானம், அறிவு, தயை, தாழ்ச்சி, இரக்கம், சாந்தம், பிறர்சிநேகம் என்னும் எல்லாப் புண்ணியங்களுக்கும் ஊற்றும், ஊறணியுமாயிருக்கிறார். ஆதிப்பெற்றோரின் பாவத்தால் நாம் இழந்துபோன, ஞான உயிரைத் தமது விலைமதிக்கப்படாத திருஇரத்தக் கிரயத்தால் மீண்டும் நமக்குப் பெற்றுத் தந்தவரும் அவரே. அன்றியும், மனிதன் யார் ? அவனுடைய கடைசி கதி எவ்வளவு மகத்தானது, அக்கதியை அடைய அவன் பின்பற்ற வேண்டிய மெய்யான வழி எது என்பதை உலகிற்குப் படிப்பித்தவரும் நமதாண்டவர் தான்! பெற்றோரை நேசித்து, அவர்களுக்குக் கீழ்ப்படிதல் பிள்ளைகளின் கடமை என்பதை நாசரேத்தூரில் தமது பெற்றோருக்கு பிரமாணிக்கமாய் நடந்து காட்டி முன்மாதிரிகையாகத் திகழ்வதும் அவர்தான்! மேலும் முதலாளி, தொழிலாளி மற்றும் சமுதாயத்தின் பிரிவுகளினால் எழும் சச்சரவை சமரசப்படுத்தும் வழி – சகோதர ஒற்றுமையும் அன்புமே என்று எடுத்துரைத்தவரும் அவரே! விண்ணுலகிற்கும், மண்ணுலகிற்கும் அவைகளிலடங்கிய சகலத்துக்கும் ஆதிகாரணராயிருந்தும் மாடடைக் குடிலில் பிறந்து, வறுமையில் வளர்ந்து, பாடுகள் பட்டு சிலுவைமரத்தில் மரித்ததும் கிறீஸ்துவல்லவா ? தமது வாழ்வாலும், சிலுவை பாடுகளாலும் மீட்பைப் பெற்றுத் தந்ததோடல்லாமல் தம்மைப் பின்பற்றி வரத்தூண்டி, தங்களது வாழ்வில் வரும் அனுதின சிலுவைகளைப் பொறுமையோடு சுமக்கக் கற்பித்து மக்களுடைய துன்ப வாழ்வை இன்பம் நிறைந்த வாழ்வாக – நித்திய வாழ்வாக மாற்றுபவர் கிறீஸ்துவானவரே தான்! சுருக்கத்தில் கூறினால் உலகத்துக்கு ஒளியும், வழியும், உயிருமானவர் கிறீஸ்து ஒருவரே!

### தேவமாதாவுக்கு மகிமை!

இத்தகைய தேவ மனிதனான சேசுகிறீஸ்துவின் மகிமைப் பெருமையிலும், புகழ்ச்சிகளிலும் பங்கு பெற முழு உரிமையுள்ளவர், தகுதியுடையவர் யார் ? நிச்சயமாக, அவருடைய தாயான அர்ச். கன்னிமாமரி மட்டுமே! கிறீஸ்துநாதரைப் பெறும் பாக்கியம் பெற்ற அவர்கள், அதனாலேயே அவரது எல்லா உயர்வுகளிலும், மகிமைப்பிரதாபங்களிலும் பங்கடைந்து, போற்றி, வாழ்த்தி, துதித்து மகிமைப்படுத்த மகா யோக்கியமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். எனவேதான் திருச்சபையும் கன்னிமாமரியை ''கிறீஸ்துவினுடைய மாதாவே'' என்று அழைத்துப் பிரார்த்திக்கிறது! நாமும் நமக்கு மீட்பைக் கொண்டு வந்த மெசியாவின் – கிறீஸ்துவின் தாயான மகா பரிசுத்த கன்னிகையை **கிறீஸ்துவின் மாதாவே** என்றுப் போற்றி, மகிமைப்படுத்தி **"எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்"** என்று தாழ்ச்சியோடு மன்றாடுவோமாக!

# நிறைவேறிவரும் தீர்க்கத்தரிசனங்கள்

**(20-ம் நூற்றாண்டில் நடைபெறவிருப்பவைகள், 16-ம் நூற்றாண்டிலேயே தீர்க்கத்தரிசனங்களாக வெளிப்படுத்தப்பட்டன - அதற்காகப் பரிகாரம் செய்யக் கேட்கப்பட்டன. ஆம்! 16-ம் நூற்றாண்டில் வாழ்ந்த வண.மரியானா தாயாருக்கு நமதாண்டவரும், தேவமாதாவும் இத்தகைய தீர்க்கத்தரிசனங்களை வழங்கியுள்ளார்கள். அவைகள் இன்று உலகில் - திருச்சபையில் நிறைவேறி வருகின்றன. இன்றும் அவைகளுக்காக பரிகாரம் செய்ய ஆண்டவரும் மாதாவும் நம்மைக் கேட்கிறார்கள். அதனை நன்கு செய்ய நாம் அத்தீர்க்கத்தரிசனங்களை அறிவது அவசியம். அந்த நோக்கத்திற்காகவே இக்கட்டுரை வெளியிடப்படுகிறது. - ஆசிரியர்)**

## "குருக்களுக்காக ஜெபியுங்கள்"

மேலும் மகிழ்ச்சியற்ற இக்காலங்களில் எஞ்சியவர்களையும் பாவத்தில் விழத்தாட்டுவதற்காக சுகபோக ஜீவிய முறைகள் கட்டவிழ்க்கப்படும். எண்ணிக்கையில்லாத பலவீனமான ஆத்துமங்கள் அதனால் இழக்கப்படுவார்கள். குழந்தைகளிடையே இனி ஒருபோதும் மாசற்றதனம் காணப்படாது என்ற நிலைமை ஏற்படும். அதுபோலவே பெண்களிடம் அடக்க ஒடுக்கமும் இல்லாமல் போகும். திருச்சபையின் மிகவும் அவசரகாலத்தின் மிக உச்சக்கட்ட நேரமான இக்காலத்தில் இதைப்பற்றி பேச வேண்டியவர்கள் பேசாமல் 'மௌனமாக' இருப்பர்.

"ஆனால், என் பிரியமான மகளே! 20-வது நூற்றாண்டில் உனது பெயர் அறியப்படும் போது, அநேகர் இந்தப் பக்தி முயற்சியானது, சர்வேசுரனுக்குப் பிரியமற்றது என்று கூறி இதை விசுவசிக்க மாட்டார்கள். எனது விசேஷ சலுகை பெற்ற குழந்தையான உனக்கு என் காட்சிகள் மூலம் வெளிப்படுத்தும் உண்மை மீது எளிமையாகவும், தாழ்மையுடனும் விசுவாசம் கொள்ளும் ஆத்துமங்கள் யாரெனில், சர்வேசுரனுடைய தேவ வரப்பிரசாதங்களினால் ஏற்படும் தேவ ஏவுதல்களுக்கு எப்பொழுதும் கீழ்ப்படியும் தாழ்ச்சியும், பக்திபற்றுதலுமுள்ள ஆத்துமங்களேயாவர். ஏனெனில், நமது பரலோகத் தந்தை தமது பரம இரகசியங்களை, இருதயத்தில் தாழ்ச்சியும் எளிமையும் உள்ளவர்களிடம் மட்டுமே தொடர்பு கொண்டு வெளிப்படுத்துகின்றார். தற்பெருமையினால் வீங்கிய இருதயங்களுடையவர்களும் தங்களுக்குத் தெரியாததைப் பற்றி தெரிந்தவர்கள் போல நடிப்பவர்களும் வெறுமையாக - காலியாக இருக்கும் அறிவைக் கொண்டு திருப்தி கொண்டவர்களுமானவர்களிடம் நம் பரலோகத் தந்தை ஒருபோதும் யாதொரு தொடர்பும் கொண்டு எதையும் வெளிப்படுத்த மாட்டார்..." என்று கூறினார்கள்.

மீண்டும் கூறிய தேவமாதா "...மேலும் இக்காலத்தில் மேற்றிராசனக் குருக்கள் வழிதவறிச் செல்வார்கள். ஏனெனில் குருக்கள் தங்களுடைய பரிசுத்த அலுவல்களை ஆற்றுவதில் கவனமற்றவர்களாகிவிடுவார்கள். அவர்கள் தங்களிடம் **தேவ திசைகாட்டி** இல்லாமல் போனதால், குருத்துவ அலுவலுக்காக சர்வேசுரனாலேயே வரையறுக்கப்பட்ட தேவ ஊழியத்தின் பாதையை விட்டு தவறான பாதையில் செல்வார்கள். உலக பொருட்கள் - செல்வங்களாலே கவரப்பட்டவர்களாக, அவற்றை அநீதமான முறையில் அடைய எத்தனிப்பார்கள். இந்த இருண்ட இரவு வேளையில் (காலங்களில்) திருச்சபையின் துன்பம் அதிகமாக இருக்கும்! தந்தைக்குரிய நேசத்துடனும், கனிவாகவும், திடத்துடனும், ஞானத்துடனும், விவேகத்துடனும் அவர்களை வழிநடத்துவதற்கு தேவையான தந்தையும் ஞான மேய்ப்பனும் இல்லாமல் போனதால் அநேக குருக்கள் தங்கள் ஞான உணர்வை இழந்து தங்களுடைய ஆத்துமங்களை பேராபத்தில் கொண்டு செல்வர். இதுவே - இந்த கடுமையான காலமே - என் நேரத்தின் வருகையின் அடையாளமாகும்.



**வண.மரியானா தாயார்**

"எனவே. எனது மகா பரிசுத்த திவ்விய திருக்குமாரனின் திவ்விய சற்பிரசாத இருதயத்தின் மீதான சிநேகத்தை முன்னிட்டும் அளவற்ற விதமாய சிந்தப்பட்ட அவரது மகா பரிசுத்த திரு இரத்தத்தை முன்னிட்டும் அவருடைய கொடூரமான பாடுகள் மற்றும் சிலுவை மரணத்தினால் அவர் அனுபவித்த ஆழ்ந்த கசப்புகளையும், வேதனை நிறைந்த துன்பங்களையும் முன்னிட்டு ஆண்டவருடைய ஊழியர்கள் மேல் இரக்கம் கொண்டு இந்த தீமைகளின் காலத்திற்கு ஒரு முடிவைக் கொண்டு வரவும்; தமது திருச்சபையின் குருக்களுக்குரிய ஞான உணர்வை மறுபடியும் புதுப்பிக்கத் தேவையான ஞான மேய்ப்பரை அளிக்கும்படியாகவும், சோர்ந்து போகாமல் தொடர்ந்து இடைவிடாமல் உரக்கக் கூவி உன் இருதயத்தின் தனிமையில் கசிந்த கண்ணீர்களுடன் நமது பரலோகத் தந்தையை நோக்கி மன்றாடுவாயாக!" என்று உலகிற்கு, திருச்சபைக்கு அடுத்து வரவிருக்கும் தீமைகளை வெளிப்படுத்தினார்கள்.

(தொடரும்)

## மாதா இணை மீட்பர்!

**நமது இரட்சண்யம் சேசுவின் அன்புடனும் பாடுகளுடனும் அந்யோந்நியமாய் மாதாவின் அன்பும் வியாகுலங்களும் ஒன்றித்தப்படி நமக்குக் கொடுக்கப்பட்டன. - பாப்பரசர் 12-ம் பத்திநாதர் - மீட்பரின் ஊற்றுகளிலிருந்து நிருபம் மே 15, 1956.**

# செய்திகள்

## நவசந்நியாசம் துவக்கம்!

ஆந்திராவைச் சேர்ந்த செல்வி சொர்ணா வான்கோலா அவர்கள் சேசுவின் திரு இருதய ஆறுதல் சகோதரிகள் சபையில் (Consoling Sisters of the Sacred Heart) உட்பட 02–07–2207 அன்று இத்தாலியில் நவசந்நியாச உடையைப் பெற்றுக் கொண்டார். சகோதரி சொர்ணா ஆந்திராவிலிருந்து பாளையங்கோட்டைக்கு தாம் இதுவரையிலும் நடத்தி வந்த அநாதை இல்லத்து உறுப்பினர்களோடு இடம் பெயர்ந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. – **சகோதரிக்காக ஜெபிப்போம்.**

## பரவி வரும் இஸ்லாமியம்!

"ஐரோப்பா கண்டம் முழுவதையும் இஸ்லாமிய மயமாக்க பெரும் முயற்சிகள் நடைபெற்று வருகிறது!" என்று பாப்பரசர் 16–ம் ஆசீர்வாதப்பரின் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த தனிச்செயலர் Msgr. Georg Ganswer ஜெர்மன் பத்திரிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

## குறைந்து வரும் கத்தோலிக்கர்கள்

கனடாவின் க்யூபெக்கில் ஞாயிறு பூசையில் பங்கேற்று கிறீஸ்தவ வாழ்வு வாழ்ந்தவர்கள் 1965–ல் 85% பேர்களாக இருந்தவர்களின் எண்ணிக்கை 1990–ல் 35% மாகக் குறைந்து, 2007–ல் வெறும் 10% மாகியுள்ளது. – **சத்திய வேதம் மீண்டும் தழைக்க ஜெபிப்போம்.**

## மரியாயின் மாநாடு பற்றிய அறிவிப்பு!

வரும் 15–ம் நாளன்று பரலோக மாதாவின் திருநாளைச் சிறப்பிக்கும்படியாக மரியாயின் மாநாடு பாளை. குருக்கள் இல்ல வளாகத்தில் நடைபெறும். காலை 8 மணிக்கு ஆடம்பர திவ்விய பலிபூசையுடன் துவங்கி, 4 உரைகள், மாலை ஆராதனை மற்றும் மாதா சுரூப பவனியுடன் நிறைவு பெறும். அன்னையின் மோட்ச ஆரோபணத் திருவிழாவை நமதன்னையோடு செலவிட்டு அவர்களது ஆசிரைப் பெறுவோமாக.

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்களும் அதன் முகவரியும்:

**பாளையங்கோட்டை:**

அர்ச். தமத்திருத்துவ குருக்கள் இல்லம்,
ஆன்னி நகர், சீவலப்பேரி ரோடு
பாளையங்கோட்டை - 627 002.
தொலைபேசி எண்: 0462 - 2572389; 2586201.

**சிங்கம்பாறை :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
சிங்கம்பாறை. முக்கூடல் அருகில்,
திருநெல்வேலி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2572389.

**கிறீஸ்துராஜபுரம் :**

கிறீஸ்துராஜா ஆலயம்,
கிறீஸ்துராஜபுரம், ஐரேனிபுரம் (P.O.),
கன்னியாகுமரி மாவட்டம்.
தொலைபேசி எண்: 04651 - 294785.

**நாகர்கோவில் :**

இராமன்புதூர்,
தொலைபேசி எண்: 0462 - 2572389.

**தூத்துக்குடி :**

அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்,
கேலெப் ஹோம்,
88B, வெற்றிவேல்புரம் (முருகன் தியேட்டர் அருகில்),
தூத்துக்குடி.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம் :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
மேல ஆசாரிபள்ளம், கன்னியாகுமரி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**திருச்சி :**

No-7, ஜவஹர் தெரு, 15-வது குருக்குச்சாலை,
குமரன் நகர், திருச்சி - 17
தொலைபேசி எண்: 0431 - 2770042.

**சென்னை :**

அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்,
சின்ன மலை, சென்னை - 600 015.
தொலைபேசி எண்: 044 - 22355389.


Society of St. Pius X

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com